உ
சிவமயம்

gistered as a News paper in Ceylon
P. M. G. NO. H. A 89/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ம்வ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருஅ] யாழ்ப்பாணம்— விய ஹு சித்திரைமீ உருவ (1946 மே 7 செவ்வாய்க்கிழமை) [இல கூ

# கந்தபுராணம்

அகில இலங்கைச் சைவமகாநாட்டில்
பண்டிதை மா. அமிர்தாம்பிகை அவர்கள் நிகழ்த்திய பேருரை

"வந்தவேலை எரித்த மலர்க்கணன்
தந்த வேலைத் தயித்தியர் காலனை
எந்த வேலையும் என்னுளம் நீக்கலாக்
கந்த வேலைக் கருத்துள் இருத்துவாம்"

சிவபுராணங்கள் பத்துள் மிகவும் சிறந்ததாகிய கந்தபுராணத்துள்ள சங்கர சங்கிதையின் முதற்கண்டமாகிய சிவரகசிய கண்டத்தையே முதனூலாகக் கொண்டது தமிழ்க் கந்தபுராணம். இதனைத் தமிழில், பதினாயிரத்திற்கு மேற்பட்ட விருத்தப்பாக்களாற் செய்தவர் மெய்ச்செவிப் புலவர் உச்சியிற்கொள்ளும் கச்சியப்ப சிவாசாரியராவர். தமிழ்த் தெய்வமாகிய கந்தக் கடவுள் வரலாற்றையும், திருவருட் சிறப்பையும் விரித்துக் கூறுவதனால் இந்நூல் இப்பெயர்த்து ஆயிற்று.

"காந்தமாகிய பெருங் கடலுட் கந்தவேள்
போந்திடுமிமித்தமும் புளிதன்கண்ணிடை
வந்தவல் தவுணர்கள் யாரும் அவ்வழி
மாய்த்திடஅடர்த்ததும்மற்றும்கூறுகேன்'

என ஆசாரிய சுவாமிகள் கூறிய வாற்றால் இது விளங்கும். இந் நூற் பெயர் ஆசிரியராலேயே இடப்பட்டதென்பது,

"தோற்ற மீறின்றித் தோற்றிய
சூர்ப்பகைக்(கு)
ஏற்ற காதைக் கெவன்பெயர் என்றிடின்
ஆற்றும் ஐம்புலத் தாறுசெல் மேலையோர்
போற்றும் கந்த புராணம தென்பதே"

இது உற்பத்தி காண்டம், அசுர காண்டம், மகேந்திர காண்டம், யுத்த காண்டம், தேவகாண்டம், தட்ச காண்டம் என ஆறு காண்டங்களை உடைத்து. ஆசாரிய சுவாமிகள் "மற்றும் கூறுகேன்" என்றது இறுதியிலுள்ள தட்சகாண்டத்தை யாகும். தட்சகாண்டத்திற்கு அடுத்த காண்டம் உபதேசகாண்டம். அதனை நாலாயிரத்துக்கு மேற்பட்ட விருத்தப்பாக்களால் ஆசாரியருடைய மாணாக்கராகிய குகனேரியப்ப முதலியார் செய்துள்ளார்.

ஆசாரியர் சாலிவாகன சகாப்தம் 700-ம் ஆண்டில் இதனை இயற்றி அரங்கேற்றினாரென்றும், கம்பர் இராமாயணம் இயற்றிய காலம் மேற்படி சகாப்தம் 800 ம் ஆண்டென்றும் அறிஞர் கூறுவர். எனவே கந்தபுராணத்திற்கு 100 ஆண்டு பிந்தியே கம்பராமாயணம் பிறந்ததாகும். தமிழ் மொழியில் விருத்தப் பாவால் முதன்முதல் யாக்கப்பட்ட புராணம் பெரியபுராணம் என்றும், அதற்கு அடுத்தது கந்தபுராணம் என்றும் சான்றோர் கூறுவர். இப் புராணமே தமிழ்மொழியிற் சிறந்த பூரணமான பெருங் காப்பியம் என்பதை இப்புராணம் முழுவதையும் சந்தேக விபரீதமற ஆராய்வோர் அறிவர். கந்தபுராணத்தையும் கச்சியப்பரையும் போற்றிப் பாராட்டும் அறிஞர் பலர்,

"உச்சிதமாம் சிவவேதியர் காளத்தி
ஒங்கு மைந்தன்
கச்சியப்பன் செய்த கந்தபுராணக்
கலைக்கடலின்
மெச்சிய கல்வி மதியும் வெண்டாமரை
வேவுமின்னும்
இச்செவி நாவினுக்கு இன்பாம்
அமுதும் எழுந்தனவே"

எனவும்,

போதமுறு சூதமுனி புகன்ற காந்தம்
புகழ்க்கடலிற் படிந்ததன்கட்
பொருளா தான
மேதகு வண்புனல் அருந்தி வையம் உய்ய
வெய்யதுயர்ப் பிறவியென்றும்
வெம்மை தீர
தாதவிழ்பூம் பொழிற் காஞ்சிக்
குவட்டிலே நிச்சலதி யமுதினை
நிகர்செந் தமிழ தான
காதன் மழை பொழிந்த அருட்
கொண்டயாம் கச்சியப்பன் இருபாதம்
உச்சி வைப்பாம்"

எனவும் வரும் அபியுக்தர் சம்பந்தசரணாலய சுவாமிகளின் வாக்குக்களால் அறியலாம்.

இப்புராணம் கந்தரனுபூதிபெற்று, அக் கந்தக்கடவுள் அடியெடுத்துக் கொடுக்க அப்பெருமானுடைய திருவருள்வழியே, பாடப்பெற்ற தைவிகம் வாய்ந்த புராணம் என்பது தமிழ்மொழியுணர்ந்த ஆன்றோர் அனைவர்க்கும் உடன்பாடான கொள்கையாம். "தமிழ் நாட்டார் எல்லாரும் பிழைக்கும்பொருட்டுத்திருவாய் மலர்ந்தருளிய திவ்விய அமிர்தம்" எனவும், "இக் கந்தபுராணத்தை விதிப்படி மெய்யன்போடு நியமமாகக் கேட்பவர், நோய் நீக்கம் செல்வம் புத்திரப்பேறு சத்துருசயம் முதலிய பயன்களைத் தாம் தாம் விரும்பியவாறே பெறுவார்கள்" எனவும் நாவலர் அவர்கள் இப்புராணத்தின் ஆசிரியரையும் புராணத்தையும் பாராட்டி எழுதியுள்ளனர். "இப்புராணம் அறுமுகக்கடவுள் மகிமையை யெல்லாம் அங்கை நெல்லிக்கனி போல எடுத்து விரித்துரைக்கும் திவ்விய புராணமாய்த் தமிழ்ப்பெருங்காப்பியமாய் நிலவுவது. இதன் செய்யுட்கள் திராட்ச கதலி இட்சு நாளிகேர பாகங்கள் கொண்டன. இது நவில்தொறும் நவில்தொறும் நாநயம் பயப்பது. பயில்தொறும் பயில்தொறும் அறுமுகக் கடவுளுடைய திருவடிப் பத்திஞானம் விளைப்பது" எனச் சபாபதி நாவலர் பாராட்டியுள்ளார்; இன்னும் இக் கந்தபுராணத்தையும் இதன் ஆசிரிய சுவாமிகளையும் பாராட்டிய அறிஞர்பலர். அவற்றை எல்லாம் ஈண்டு உரைப்பிற் பெருகும் என்று அஞ்சி விடுத்தேன்.

கந்தபுராணத்தின் அருமை பெருமைகளை நோக்கி இதனை முதனூலாகக்கொண்டு தோன்றிய வழிநூல்கள் கந்தபுராணச்சுருக்கம், கந்தபுராண வெண்பா, கந்தபுராணக் கடும்பொருள் விளக்கம், கந்தபுராண வசனங்கள் (இரண்டு) கந்தபுராண விளக்கம் முதலியனவாம்.

இப்புராணத்தில் உள்ள கடவுள் வணக்கங்கள் எல்லாம் சிவபர தத்துவத்தையும் சைவ சித்தாந்தத்தின் திட்ப நுட்பங்களையும் வெள்ளிடைமலைபோல் விளக்கிக் காட்டுகின்றன. இடையிடையே வரும் தோத்திரங்கள் இவ்வியல்பினவென்பதை,

"ஊனாகி ஊனு ளுயிராகி
[illegible]
வானாதியான பொருளாய்
மதியாகி வெய்யோன்
தானாகி யாண்பெண்
உருவாகிச் சராசரங்கள்
ஆனாற் சிவன்மற் றவன்நீள்
கழற்கன்பு செய்குவாம்."
ஊரிலான் குணம் குறியிலான்
செயலிலான் உரைக்கும்
பேரிலான் ஒரு முன்னிலான்
பின்னிலான் பிறிதோர்
சாரிலான் வரல் போக்கிலான்
மேலிலான் தனக்கு
நேரிலான் உயிர்க் கடவுளாய்
என்னுளே நின்றான்

இரண்டாவதாய் உள்ள திருவிருத்தம் எச்சமய வாதிகளும் தாம்தாம் வழிபடு தெய்வத்தைத் துதிக்கக் கூடிய பொதுமையாகப் பாடப்பட்டுள்ளது

அவை அடக்கம் இருவகைப்படும். ஒன்று அவைக்கு அடங்குதல், மற்றது அவையை அடக்குதல். கச்சியப்பரும் அவைக்கு அடங்குதலை விடுத்து, அவையை அடக்கியுள்ளார் என்பது "குற்ற மேதெரி வார்குறுமாமுனி, சொற்றபாவினும் ஓர்குறை சொல்வரால்" எனக் குறை கூறுதலையே நோக்கமாகக் கொண்டு ஒரு நூலை ஆராயப்படாதென்று அவையை வற்புறுத்துகின்றார். இன்னும் ஆசாரிய சுவாமிகள் வடமொழி தென்மொழி என்னும் இருமொழிக் கடலும் கரைகண்டவர் எனினும், அந்தணர் குலத்தில் அவதரித்தவர் எனினும், செந்தமிழ் மொழியிலேயே அதிக ஆர்வமுள்ளவர்என்பது "முன்

தொடர்ச்சி 6ம் பக்கம்

## 'எங்களை நம்புங்கள்' என்கிறார் மொலமுறே

"நாங்கள் சிங்களவர்கள்; எங்களை நீங்கள் நம்புங்கள்—முற்றாக நம்புங்கள்; நாங்கள் உங்களுக்குத் துரோகஞ் செய்யமாட்டோம்" என்று அரசாங்கசபை அங்கத்தினரான A. F. மொலமுறே அவர்கள் சென்ற சனிக்கிழமை யாழ்ப்பாண நகரமண்டபத்தே நடைபெற்ற தேசியத் தமிழர் நிர்வாகசபைக் கூட்டத்திற் பேசினார். அவர் மேலுங் கூறியதாவது:-

"நான் ஒருகுழுவின் தலைவனல்ல; என்னைப் பின்பற்றுபவர்கள் எவருமில்லை. நான் அரசாங்கத்தின் ஓர் மந்திரியல்ல. அரசியல் விஷயங்களில் நான் தலையிட்டாலும், நான் எப்பொழுதும் ஒரு நிதார்த்தவாதியாயிருந்திருக்கிறேன். நான் இதை உங்களுக்கு ஒரு பெருமையோடு தான் சொல்லுகிறேன். யார் அரசியலைத் தூய்மையாக்க எத்தனிக்கிறார்களோ, அவர்களுக்காக உங்கள் உதவியை அளியுங்கள் என்று யான் உங்களை வேண்டுகிறேன்."

### சுன்னாகத்தில் மொலமுறே

"கண்டி நாட்டுச் சிங்களவர்களாகிய எங்களில் தமிழ் உதிரம் கலந்திருக்கிறது. ஏனெனில், நாங்கள் தமிழ் அரசர்களால் ஆளப்பட்ட போது அதிக கலப்பு நிகழ்ந்திருக்கின்றது என்பது வெளிப்படை. இதைக்குறித்து நான் மிகவும் பெருமைப்படுகிறேன்" என்று மொலமுறே அவர்கள் சுன்னாகத்தின் நடந்த ஒரு பகிரங்கக் கூட்டத்திற் பேசினார். அவர் மேலுங் கூறியதாவது:-

"நீங்கள் பொறுமையும், விசாலமான நோக்கும், முற்போக்கான கொள்கையுமுடையவர்கள்; ஆழ்ந்து சிந்தியாது எக்காரியத்திலும் திடீரென இறங்கமாட்டீர்கள். ஆகையால், நீங்கள் எங்களுடன் சேர்ந்து இந்நாட்டின் பாதுகாப்பிற்காக உழைக்க உதவுங்கள்".

மொலமுறே அவர்களின் வார்த்தைகளை ஆதரித்து A. மகாதேவா அவர்கள் கூறியதாவது:—

"எங்களுடன் சேர்ந்து உழைக்கக் கூடிய சிங்களவர்களுடன் நாங்களும் சேர்ந்து உழைப்பது நன்மைக்கு வழியாகுமென்பது என் அபிப்பிராயம்."

அடுத்தபடியாக திரு. சு. நடேசன் அவர்கள் பேசும்போது, தான் ஜி ஜி பொன்னம்பலம் கட்சியினின்றும் நீங்கியதற்குக் காரணம் ஜி. ஜி யின் பிடிவாதமான ஐம்பதுக்கைம்பது கொள்கைதான் என்றும், அதனால் தமிழருக்கும் சிங்களவருக்கும் சினேகபான்மை ஏற்பட இடமில்லையென்றும் தெரிவித்தார். இப்பொழுது சிறுபான்மையினரான எமக்குச் சிங்களவர்கள் மிகுந்த அனுதாபங்காட்ட முன்வந்திருக்கிறார்கள்; அதை நாம் வெறுத்துத் தள்ளாது, அவர்களுடன் சேர்ந்து ஒழுகுவதே தமிழர்களின் பாதுகாப்புக்கு வழியாகும் என்று தெரிவித்தார்.

## வித்தியாசாலைகளில் இலவச உணவு

சில வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர்கள் மத்தியானப் போசனம் அளிப்பதற்கெனக் கொடுக்கப்படும் பொருள்களைத் துர்விநியோகப்படுத்துகிறார்களென்று பல முறைப்பாடுகள் செய்யப்பட்டிருப்பதன் பலனாக கல்விப்பகுதி அதிகாரிகள் சில தலைமை ஆசிரியர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்தார்கள். அதன்காரணமாக மத்தியானத்தில் இலவச போசனமளிக்கும் திட்டம் இப்போது திருப்திகரமான முறையில் நடைபெறுகின்றது. சத்துள்ள கூடுதலான உணவு இப்போது அதிகப்படுகிறது என வித்தியாபகுதியாரின் ஓர் அறிக்கை கூறுகிறது

மத்தியானப் போசனத்தின் பொருட்டு 1944—45 இல் செலவிடப்பட்ட பணத்தின்தொகை 5228549 ரூபாயாகும். இலவச போசனம் பெற்ற மாணவர் தொகை 486111.

## மாசம்தோறும் 700000 தொன் கோதுமை வேண்டும்

உலகம் முழுவதுக்கும் விநியோகஞ் செய்து பஞ்சப்பிணியைப் போக்குதற்கு மாதந்தோறும் 700000 தொன் கோதுமையை ஒதுக்கி வைக்கவேண்டுமென்று ஐக்கியதேச நிவாரண சங்கத்தின் அதிகாரியான மிஸ்ரர் பியோரிலா கார்டியா கூறுகிறார்.

உலக உணவு நிலையை ஆராய்தற்காக அமெரிக்க பிரஜாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ள மிஸ்ரர் ஹெர்பர்ற் ஹூவர் சென்ற முதலாந்தேதி டெல்கியிலிருந்து, அகிலஉலக உணவு நிலை சம்பந்தமாகப் பின்வருமாறு கூறினர்:-

"உலகில் உணவு நெருக்கடி ஆகஸ்டு செப்டெம்பர் மீ வரை நீடிக்கும். இதுவரை உணவின்றிக் கஷ்டப்பட வேண்டிய மக்கள் 50 கோடி பேர் இருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.


# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், வியஆ
சித்திரைமீ உருவ செவ்வாய்க்கிழமை


## யாழ்ப்பாணத்திற் கல்வி குன்றுகின்றதா?

I

ஒரு காலத்திலே இலங்கை முழுவதிலுமுள்ள மாணவர்களுள் யாழ்ப்பாணத்துள்ள மாணவர்களே கல்வியில் விரைவான தேர்ச்சியடைந்து வந்தார்களென்பது உலகப்பிரசித்தம்; சென்னைச் சர்வகலாசாலை தொடங்கி, பி. ஏ. பரீட்சை முதன்முதல் நடத்தியபோது, தென்னிந்தியாவிலுள்ள அத்தனை மாணவரும் அப் பரீட்சையிலே சித்தியெய்தாது தவறிவிட, வித்துவான் சி. வை. தாமோதரம்பிள்ளை யவர்கள், விசுவநாதபிள்ளையவர்கள் இருவரும் மாத்திரந்தான் அப் பரீட்சையிலே திறமையோடு சித்தியடைந்தனரென்பது பலரறிந்த இரகசியம். இது ஆங்கிலக் கல்வி கீழைத்தேசத்தில் ஆரம்பிக்கப்பட்ட காலமாகும்; அதன் பின்னரும் யாழ்ப்பாணத்துள்ள அக்காலத்து மாணவர்கள் பலர் ஆரம்பக் கல்வியை யாழ்ப்பாணத்திற்றானே பயின்றுகொண்டு, சென்னையிலும், பின் கல்கத்தாவிலுமுள்ளனவாகிய சர்வகலாசாலைத் தாபனங்களிலே சேர்ந்து கல்வி பயின்று, மேல்வகுப்புப் பரீட்சைகளில் விசேஷ சித்தியடைந்து, தென்னிந்தியாவிலுள்ள கலாசாலைகளிற் பேராசிரியர்களாகத் திறமையோடு கடமை பார்த்துத் தமக்கும் தம் தாய் நாட்டினராகிய யாழ்ப்பாணத்தினர்க்கும் மங்காப் புகழையும் மதிப்பையும் ஈட்டி வைத்தனர்; அக்காலத்திலே தமிழ்மொழியிலும் சிறந்த நாவலர் வித்துவான் புலவர் பண்டிதர்களைத் தந்ததும் எங்கள் யாழ்ப்பாண நாடேயாகும்; அப்படியான அறிஞர்கள் இந்நாட்டிலும் இந்திய நாட்டிலும் சமயத்தொண்டும் தமிழ்த்தொண்டும் பெருமையுடன் ஆற்றி இரு நாட்டினர்க்கும் சமய அறிவினையும் தமிழறிவினையும் நிலைநாட்டிப் பல அரிய நூல்களையும் இயற்றிவைத்தனரென்பது இரு நாட்டினரும் அறிந்த விஷயம் அந்நாட்டொடக்கம் இற்றைக்கு சில வருடங்கட்குமுன் வரையில் யாழ்ப்பாணத்து மக்கள் இலங்கையிலுள்ள ஏனைய சாதியினரைக்காட்டிலும் கல்வியிலே சிறந்தவர்களாக வந்தார்கள்; உயர்ந்த உத்தியோகங்களையும் பெற்றுவந்தார்கள்; இற்றைக்குச் சில வருடங்கட்கு முன்னர்த் தொடக்கமாக, கண்டி முதலிய சிங்கள நாட்டிலுள்ள மாணக்கருள் ஒரு சிலர், இங்குள்ள கல்லூரிகளிலே கல்வி பயிலும்வண்ணம் தங்கள் [illegible]ள்ளைகளை அங்கிருந்து இங்கே விட்டிருந்து படித்தற்காகிய ஒழுங்குகளைச் செய்ததையும் நாம் அறிவேம்.

ஆனால், இப்பொழுது சிலவருடங்களாக யாழ்ப்பாணப் பிள்ளைகளின் நிலைமை நேர் விரோதமாக மாறிவிட்டது; இலங்கையின் ஏனைய பாகங்களாகிய கொழும்பு கண்டி முதலாம் பட்டினங்களி லுள்ள கலாசாலைகளிற் கல்வி பயிலும் மாணவர்கள் உயர்தரப் பரீட்சைகளிற் கூடிய விகிதத்தினராகச் சித்தியெய்த, யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள கலாசாலைகளிற் பயிலும் மாணவர்களுட் சித்தியடைந்து வருவோர் தொகை "உலக்கை தேய்ந்து உளிப் பிடியாயவாறு" மிகவுங் குன்றத் தலைப்பட்டுக்கொண்டது; சென்ற 1944-ம் ஆண்டு தொடக்கமாகப் பின்வந்த ஆண்டிலும் H. S. C என்னும் பரீட்சையிற் சித்திபெற்ற மாணவர்களுட் கொழும்புப் பகுதியிலுள்ள கல்லூரிகளிற் பயின்ற மாணவர்களின் விகிதம் அதிகப்பட, இந்த யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள மாணவர்களின் சித்தி விகிதம் மிகவும் குறைதலாயிற்று. சென்ற ஆண்டு டிசெம்பர் மாசத்தில் நடைபெற்ற சர்வகலாசாலைப் பிரவேசப் பரீட்சையில் இலங்கை முழுவதிலும் சித்தியெய்திய மாணக்கர்களின் தொகை 346 ஆகும். இவர்களுள், தமிழ்ப் பிள்ளைகள் 93 பேர் மாத்திரமாவர். 1945-ம் ஆண்டு நிகழ்ந்த H. S. C. பரீட்சையிற் சித்தியெய்திய மாணக்கர்களின் முழுத்தொகை 113. இவர்களுட் சித்தியெய்திய தமிழ்ப் பிள்ளைகளின் தொகை 33 மாத்திரமாகும். இவர்களுள்ளும் யாழ்ப்பாணத்திலுள்ள சுண்டிக்குளிக் கல்லூரியில் மூன்றும், மத்திய கல்லூரியில் இரண்டும், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் இரண்டும், வட்டுக்கோட்டைக்கல்லூரியில் இரண்டும், பருத்தித்துறை காட்லிக் கல்லூரியில் ஒன்றுமாகச் சித்தியடைந்தோர் ஒன்பதுபேராவர். ஆனால் கண்டியிலுள்ள திரினிற்றிக் கல்லூரியில் மாத்திரம் 5 மாணவர் மேற்படி பரீட்சையிற் சித்தியடைந்துள்ளனர்; யாழ்ப்பாணப் பெரும்பிரிவிற் சிறந்த கல்லூரிகள் ஐந்திலிருந்துபிரவேசித்துப் பரீட்சையிற்சித்தியடைந்தமாணவர்தொகை ஒருங்குசேர்ந்துஒன்பதானால், கல்வி விருத்தி விஷயத்தில் இக்கல்லூரிகளால் அடையும் பயன், மலை வயிறுநொந்து சுண்டெலியை ஈன்றவாறாகுமல்லவா? இற்றைக்குச் சில வருடங்கட்கு முன்னர் இலங்கைச் சர்வகலாசாலை உபதலைவராகிய டக்ரர் ஐவர் ஜென்னிங்ஸ் என்பவர் ஒரு சந்தர்ப்பத்தில், குறித்த கலாசாலையில் யாழ்ப்பாணத்து மாணவர் கல்வி பயிலும் பொருட்டுப் பிரவேசிக்க முயன்றபோது "யாழ்ப்பாணத்திலிருந்துவரும் மாணவர்களுள் மூன்றில் இரண்டுபங்கு தொகையினராகிய மாணக்கரின் கல்வியறிவு நிலை மிகவும் குறைந்ததாகும்; இவர்களுள் அனேகர் தங்களுக்கு விதிக்கப்பட்ட பாடப் புத்தகத்திற் கொண்ட அறிவைத் தவிர, பொதுவாக நூல்களைத் தாமாகப் படித்துப்பெற்ற அறிவுடன் காணப்படுகின்றிலர்" எனத் தெரிவித்துள்ளார்.

## 'பதவியை விட்டு விலகுக

யாழ்ப்பாணம் நகர வரியிறுப்போர் சங்கக் கூட்டம் ஒன்று சென்ற 3-5-46ல் நியாயதுரந்தரர் S. M. அபூபக்கர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

நகரசபையின் நிர்வாகம்—விசேஷமாக மின்சாரப்பகுதிப் பரிபாலனம்—மிகவும் கேவலமுறையில் இருக்கிறதென்றும், அதனால் நகரமக்கள் மிகவும் கஷ்டப்படுகின்றனர் என்றும், இவற்றுக்கெல்லாம் காரணம் நகரசபைத் தலைவரின் பராமுகமே என்றும், ஆகவே நகரசபைத் தலைவர் தம் பதவியை விட்டு விலகவேண்டும் என்னும் ஓர் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது

## யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

வருடப்பிறப்பு விடுமுறை நாட்கள் முடிந்தபின், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, சைவ மகளிர் கல்லூரி, இந்துக்கல்லூரித் தமிழ் வித்தியாசாலையென்னுமிவைகள் நேற்று (6-5-46 ஆரம்பிக்கப்படலாயின.

## புலபாய் தேசாய் தேகவியோகம்

பிரபல இந்திய காங்கிரஸ் தலைவரான ஸ்ரீஜத் புலபாய் தேசாய் அவர்கள் நேற்றுத் தேகவியோகமாயினர் என்று ஓர் தந்திச்சேய்தி கூறுகிறது.

## விவாகம்

இராமச்சந்திரன் — தங்கரத்தினம்மாள்

வண்கிழக்கு திரு. A. செல்லப்பா அவர்களின் புதல்வரும் யாழ்ப்பாணம் ஐக்கியசங்க மொத்த விற்பனவுப் பகுதியில் உத்தியோகம் வகித்திருப்பவருமாகிய திரு. இராமச்சந்திரன் அவர்களுக்கும், தலையாளி டக்ரர் S. சின்னத்தம்பியாபிள்ளையவர்களின் புதல்வி திருவளர் செல்வி தங்கரத்தின அம்மாளுக்கும் நேற்று (6-5-46) மத்தியானம் வரையில் நிகழ்ந்த சுபமுகூர்த்தத்தில் மணமகளில்லத்திற்றானே விவாகம் விதிப்படி சிறப்புற நிறைவேறியது வண்மேற்கு காட்டுத்துறைப் பிள்ளையார் கோவில், கருணாகர வைரவகோயில், பகவதி மாரியம்மன் கோயில் முதலிய கோவில்களின் குருக்களாகிய பிரமஸ்ரீ சி. இரத்தினசபாபதிக்குருக்கள் அவர்களே விவாகச் சடங்குகளைத் தம்பதிகளின் சுற்றமித்திரர் பலர் சமுகத்தில் விதிப்படி சிறப்புறச் செய்தனர்.

மணமக்கள் அட்ட ஐசுவரியங்களையும் பெற்று இன்புற்று இனிது வாழும் வண்ணம் எல்லாம்வல்ல இறைவன் திருவருள் புரிவாராக.

## யாழ்ப்பாணப் பெரியார் சரித்திரம்

யாழ்ப்பாணத்தின் கௌரவத்துக்கும் எதிர்கால முன்னேற்றத்துக்கும் இன்றியமையாது வேண்டப்படுவதாகும் யாழ்ப்பாணப் பெரியார்களின் சரித்திரத்தை எழுதி வெளியிட அகில இலங்கைக் கருணைக் கழகம் முன்வந்திருக்கிறது

சங்கர பண்டிதர், சிவப்பிரகாச பண்டிதர் பீதாம்பரப் புலவர், சபாபதி வித்துவான், அருணசல உபாத்தியாயர் முதலியவர்களின் சரித்திரங்கள் அவசியம் எழுதப்படவேண்டியவை

இத்தொண்டுக் குதவியான சரித்திரக் குறிப்புக்களை எழுதித் தன்னிடம் அனுப்பவேண்டும் என்று நீர்வேலி காவியபாடசாலை ஸ்ரீ செ. துரைசிங்கம் அவர்கள் அபிமானிகளை வேண்டிக்கொள்ளுகிறார்.


## விற்பனைக்கு

ஒஸ்ரின் 12/4 சலூன் கார்; எவ்வித பழுதுமற்றது Z நம்பர்; இரண்டு புதிய ரயர்களும், இரண்டு புதிது மங்காத ரயர்களும் உடையது

டொக்ரர் T. குலநாயகம்
D. M. O 's வங்களா
வட்டுக்கோட்டை

Mis 33 7—14-5-45


## இசைக்கலை மன்றம், கொழும்பு

### திருப்புகழ் வகுப்பு ஆரம்ப விழா

வெள்ளவத்தை இசைக் கல்லூரியில் ஓர் அங்கமாக நடைபெறவிருக்கும் திருப்புகழ்வகுப்பினைத் திருவாங்கூர் நீதியரசர் 'திருப்புகழ்மணி' ராஜீய சேவப்ரவீன T. M கிருஷ்ணசாமி ஐயரவர்கள் சென்ற சனிக்கிழமை மாலை 27-4-46 ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் ஆரம்பித்து வைத்தார்கள்.

முதலில் இசைக்கல்லூரி மாணவிகள் வரவேற்புப் பாக்கள் பாடினார்கள். பின்னர் மன்றத்துக் காரியதரிசி திரு. குல. சபாநாதன் திருப்புகழ் வகுப்பினை ஆரம்பித்து வைக்குமாறு திருப்புகழ் மணியவர்களை வேண்டிக்கொண்ட பொழுது, "இசைக்கல்லூரியில் ஓர் அங்கமாக தேவார திருவாசக திருப்புகழ் வகுப்புக்கள் நடத்தப் பல காலமாக எங்கள் தலைவர் திரு. கனகரத்தினம் அவர்கள் முயன்று வருகின்றார்" என்றும், "இசைக்கல்லூரியைத் திறந்துவைக்குமாறு எங்கள் தலைவர் கேட்ட திருப்புகழ் மணியவர்களே இப்பொழுது இத் திருப்புகழ் வகுப்பினை ஆரம்பித்து வைக்க நேர்ந்தது கதிர்காம வேலன் திருவருளேயாகும்: அது எங்கள் பாக்கியமுமாகும்" என்றும் குறிப்பிட்டார்கள்.

திருப்புகழ் மணியவர்கள் இன்னிசையுடன் திருப்புகழ் வகுப்பினை ஆரம்பித்து வைத்தார்கள் பின்னர் ஸ்ரீ முருகதாஸ் அவர்கள் இரண்டு நாட்களாகப் பயிற்றிய எட்டுச் சிறுமிகள் தெரிந்தெடுத்த திருப்புகழ்ப் பாக்களை இன்னிசையோடு பாடிச் சபையினரை மகிழ்வித்தார்கள். இவர்கள் பாடியதும், "இந்த அஷ்ட லட்சுமிகளுடன் ஆரம்பமான இவ்வகுப்பு இலங்கையில் திருப்புகழைப் பரவச்செய்ய உதவி புரியுமென்றும், ஒவ்வொரு தெருவிலும் திருப்புகழ் வகுப்பு நடைபெறவேண்டும்" என்றும் திருப்புகழ் மணியவர்கள் கூறினார்கள், திருப்புகழ் என்னும் பொருள் பற்றி அரியதொரு சங்கீதப் பிரசங்கஞ் செய்து, கதிர்காமக் காட்சியையும் யாவருளத்திலும் பதியுமாறு விளக்கினார்கள். இதன்பின்னர் ஸ்ரீ முருகதாஸ் அவர்கள் சில பாடல்களைப் பக்திச்சுவை சொட்ட இனிய குரலிற் பாடினார்கள்.

பின்னர் மன்றத்து உப தலைவர் திரு. எம். எஸ். திருவிளங்கம் அவர்கள், கடந்த மூன்றுகிழமையாகத் திருப்புகழ்மணியவர்கள் இலங்கையில் நின்று செய்த தொண்டினையும், இலங்கைமுழுவதையுமே முருகமயமாக்கிவிட்ட சிறப்பினையும் சிறு பிள்ளைகள்கூட அரோகரா நாமத்தை உச்சரிக்கப்பழகியதனையும் உருக்கத்துடன் விளக்கி, திருப்புகழ் மணியவர்களை இலங்கைக்கு வரவழைப்பதற்குக் காரணராயிருந்த திரு. கனகரத்தினம் அவர்களையும் பாராட்டிப் பேசினார்கள்.

## காரைநகர்ச் சைவ மகாசபை

நிகழும் வியஆ சித்திரைமீ அஉ (21-4-46) ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணியளவில் இச்சபையின் முப்பதாம் வருடாந்தக் கூட்டம் உப தலைவர் வே. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது, சபையின் அறிக்கைகள் வாசித்து அங்கீகரிக்கப்பெற்றன. புதிய வருட நிருவாக சபையினர் பின்வருமாறு தெரிவு செய்யப்பெற்றனர்.

தலைவர் திரு. இ. நாகலிங்கம் அவர்கள், உப தலைவர்கள் திரு சோ. சின்னத்தம்பி அவர்கள், திரு. இ. அம்பலவாணர் அவர்கள் காரியதரிசி திரு அ. தேவாரசா அவர்கள், உப காரியதரிசி பிரமஸ்ரீ இ. சோமசுந்தர ஐயர் அவர்கள், தனாதிபர் திரு. சி. தம்பிப்பிள்ளை அவர்கள், அங்கத்தவர்கள்: திரு. க. செல்லப்பா, திரு. க. நல்லதம்பி, திரு. மு. கார்த்திகேசு, திரு. க. சிற்றம்பலம், திரு. அ. சடாட்சரம்.

அன்று சாயந்தரம் ஐந்து மணியளவில் திருமயிலைச் செல்வி K. S. காஞ்சனமாலை அம்மையாரவர்கள் "தென்னாடுடைய சிவன்" என்னும் விஷயத்தைப் பீடிகையாகக் கொண்டு அன்புநெறியை வளரச் செய்யத்தக்க சிறந்த பிரசங்கஞ் செய்தார்கள்.

அடுத்ததினம் காலை பத்து மணியளவில் திருவாங்கூர்ப் பிரதமநீதியாசர் திரு. T. M. கிருஷ்ணசாமி ஐயரவர்கள் "அருணகிரிநாதரும் திருப்புகழும்" என்னும் விஷயமாக அன்பர்கள் பக்தி வலையில் வீழத்தக்க முறையில் திருப்புகழ்ப் பாராயணஞ் செய்து கலியுகப் பெருமானின் திருவருளை நாடும் முறையில்செல்லும்படியாகச் சிறந்த பிர[illegible]ங்கஞ் செய்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவசமய பரிபாலனம்

(காரைநகர் இ. நாகலிங்கம்)

சைவசமயமே சமயஞ்
சமயாதீதப் பழம்பொருளைக்
கைவந்திடவே மன்றுள்
வெளிகாட்டுமிந்தக் கருத்தைவிட்டு
பொய்வந்துழலுஞ் சமயநெறி
புகுதவேண்டா முத்திதருந்
தெய்வ சபையைக் காண்பதற்குச்
சேரவாரும் செகத்தீரே

எம்பரம்பொருளாகிய சிவபெருமானின் திருவிளையாடல்கள் நிரம்பப்பெற்ற புண்ணிய பூமியாகிய பரத கண்டத்தில் பண்டைக்காலம் தொட்டு பல பெரியோர்கள் தோன்றி எம் சைவ சமயத்தைப் பரிபாலித்து வருகிறார்கள். அதனால் பண்டைக் காலம் தொட்டே பாதகண்டமானது புண்ணிய பூமியாகப் பிரகாசித்து வருகின்றது. எம் யாழ்ப்பாணமும் பரதகண்டத்தின் அண்மையிலுள்ளது. இங்கு வசிப்பவர்கள் பரத கண்டத்தைச் சேர்ந்தோராவர். தங்கள் தொடர்புக்கேற்ப சைவசமயக் கொள்கைகள் நிரம்பப்பெற்றவர்களாயிருக்கின்றனர். அந்நிய அரசாட்சியாராலும் பிறசமயத்தவரின் போதனைகளாலும் தம் சமய நிலையிற் றவறி சைவசமயம் தளர்வுறுங் காலத்து ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் திருவவதாரஞ்செய்து சைவ சமயத்தையும் தமிழையும் பரிபாலிக்கும் முறையில் பெரும் தொண்டாற்றினார்கள். இவர், அஞ்சாத வீரர் சமய சாஸநிமலன் கழுத தேசிய துறவி. நினைத்த காரியத்தை எடுத்து வாதிக்கும் நாவலர்; வாணாள் வீணாக்காது சமயத்துக்கு உழைத்த பெரியார். சைவத்தையும் தமிழையும் வளரச்செய்வதற்கு சைவத் தமிழ் வித்தியாசாலைகள் பெரும் துணையாகும் எனக் கருதி இந்தியாவிலும் இலங்கையிலும் பல சைவத் தமிழ் வித்தியாசாலைகளை ஸ்தாபித்தும் ஸ்தாபிக்கச் செய்தும் வந்தார்கள். அவர்களது கன் முயற்சியால சைவ உண்மைகளை உணர்ந்து பலர் சைவசமய அநுஷ்டானங்களை விதிப்படி அநுஷ்டிக்கலாயினர். சிவாலயம், மடாலயம், வித்தியாலயம் முதலியவற்றின் தர்ம நிர்வாகஸ்தர்கள் கிரமமாகப் பரிபாலிக்கலாயினர். அவர்கள் காலத்திலும் பின்னும் சபாபதி நாவலர், இராவ்பகதூர் வை. தாமோதரம்பிள்ளை, குமாரசாமிப்புலவர், சுவாமிநாதபண்டிதர் முதலிய பெரியோர்கள் "தோன்றிற் புகழொடு தோன்றுக" என்பதற்கிணங்கத் தோன்றி எம் யாழ்ப்பாணத்திலும் இந்தியாவிலும் நாவலர் பெருமான் சைவசமயத்திற்கும் தமிழுக்கும் செய்த தொண்டுகளைத் தொடர்ந்து பரிபாலித்து வந்தார்கள். ஆனால் யாழ்ப்பாணத்துக்கும் தென்னிந்தியாவுக்கும் முள்ள தொடர்பு பெலமேலும் அதிகரித்து வருவதாயிற்று, மேலும் சைவசமயத்திற் பிறந்துள்ளார் பலர் தம நூல்களில் கடவுளைப்பற்றியும், உயிரைப்பற்றியும் உலகத்தைப்பற்றியும் உயிர்களடையும் துன்பங்களுக்குக் காரணம் பற்றியும், துன்பங்கள் நீங்கு விடுதலையடைவதற்குரிய வழிவகைகளைப் பற்றியும் விளக்கப்பட்டுள்ளவைகளை அறியாதவர்களாயும், அறியமுயலாதவர்களாயும், தமது ஒழுக்கங்களை வழுவச்செய்கின்றனர்; இது மிகவும் இரங்கற்பாலதாகும். சைவசமயிகளாவார் தோத்திரங்கள் என வகுக்கப்பட்டுள்ள தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா முதலான நூல்களைப் படித்தலோடு பதிபசுபாசம் எனக் கூறப்படும் கடவுள், உயிர், உலகம் என்னும் முப்பொருள்களின் இலக்கணங்களை முறையாக எடுத்து அறிவிக்கும் சிவஞானபோதம், சிவஞான சித்தியார் சிவப்பிரகாசம் முதலான ஞான நூல்களைக் கற்றுங் கேட்டுஞ் சிந்தித்துந் தெளிந்து நிட்டை கூடிச் சிவானுபவம் பெறவேண்டும். "ஞானம் அல்லது கதிகூடுமோ" என்று தாயுமான சுவாமிகள் அருளிச்செய்தனர். சமய தத்துவ ஞானம் மக்கள் உயிர்க்குத் தெய்வத்தன்மையடையச்செய்யும் என்பதனை உணர்ந்த நாவலர் பெருமானின் அன்பர்கள் குறித்த நோக்கத்தைப் பரிபாலிப்பதற்காக யாழ்ப்பாணத்துச் சைவபரிபாலனசபையை ஸ்தாபித்தார்கள்.

அதற்குப் பின்ன நம் நாவலர்பெருமானின் மாணவர்களும் ஆங்காங்கு சமயப்பிரசங்கஞ் செய்து நாவலர் பெருமானின் முயற்சிகளைத் தளரவிடாது வளர்த்து வருகின்றார்கள். இந்தியாவின் தவப்புதல்வராக அவதரித்த சுவாமி விவேகானந்தரவர்கள் சுவாமி இராமகிருஷ்ண பரமஹம்சரின் உபதேசங்களைப் பெற்றுத் தொண்டாற்றி வருநாளில்

"காகமுறவு கலந்துண்ணக்
கண்டீர்! அகண்டாகாரசிவ
போகமெனும் பேரின்ப வெள்ளம்
பொங்கித் ததும்பிப் பூரணமாய்
ஏகவுருவாய்க் கிடக்குதையோ!
இன்புற்றிட நாமினி யெடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச்
சேரவாரும் செகத்தீரே"

என்னும் தாயுமான சுவாமிகளின் திருவாக்குக்கிசைய நாம் பெற்றிடும் இன்பம் வையகம் பெற்று உய்ய வேண்டும் என்பதை உணர்ந்து அமெரிக்கா சென்று சைவசமய உண்மைகளைச் சர்வதேச சமய மாபெரும் சபையில எடுத்துரைத்து வெற்றி பெற்ற அந்நாடுகளில் போதித்து சைவசமய உண்மைகளை அவர்களுக் கறிவித்து அவர்களனுஷ்டிக்கத்தக்கதாகத் தொண்டாற்றி வைத்தார்கள் அவர்கள் மேற்கு தேசத்தினின்றும் திரும்பிப் புண்ணிய பூமியாகிய இந்தியாவிற்குச் செல்லுங்கால இலங்கா தீபத்தைத் தரிசிக்க அவாவுற்றுவந்து கொழும்பு நகரத்திலே செய்த பிரசங்கத்தின் பயனாக அந்நகரத்திலுள்ள பெரியோர்கள் சுவாமிகளின் நாமத்தினால் ஸ்தாபித்த கொழும்பு விவேகானந்தசபை யென்னுஞ் சபையானது சமய பரிபாலனஞ்செய்து வெற்றி பெற்று இன்றுந் தொடர்ந்து தொண்டாற்றி வருவது போற்றப்படத்தக்கதாகும். அதன்பின் யாழ்ப்பாணத்து வாலிபர் சைவசமய அபிமானமுற்றவர் யூத்து வாலிபர் சங்கம் என்னும் பெயருடன் பல இடங்களில் சங்கங்கள் ஸ்தாபித்தனர். அதன்பயனாக எம் சைவசமயக் குழந்தைகள் சமயதீட்சை பெற்று சமய அனுட்டானம் செய்ய ஆரம்பித்தனர், கிறீஸ்தவ பள்ளிக்கூடங்களில் கல்வி பயின்ற மாணவர் அவர்களின் வஞ்சனைகளை யறிந்து பிகனர் சைவப்பாடசாலைகளிற் படிக்கத் தொடங்கினர்.

இக்காலத்தில் காரைநகரிலே யாழ்ப்பாணத்தின் முன்னணியாக ஓர் சங்கம் ஸ்தாபிக்கப்பெற்று பெரும தொண்டாற்றி வருவது யாவரும் அறிந்ததொன்றாகும். இலவச வாசிகசாலையாக நடத்த ஆரம்பித்து அநேக அரிய புத்தகங்களையுடைய ஓர் சாலையாக அது இப்போது விளங்குகின்றது, இலங்கையின் ஏனைய இடங்களிலுள்ள சங்கங்கள் எல்லாம தளர்ச்சியடைந்தபோதிலும் இச்சபையானது சைவ மகாசபை யென்னும் பெயர்பூண்டு பெயருக்கேற்றத் தளர்ச்சியடையாது வளர்பிறைச் சந்திரன் போல் வளர்ந்து வருவதாயிற்று. ஆரம்பத்தில் பிரசங்கங்கள், சமய வகுப்பு தேவார வகுப்பு, இராப்பள்ளிக்கூடம் துண்டுப் பிரசுரம் முதலிய வழிகளில் சைவ அன்பர்களுக்குத் தொண்டாற்றி வந்தது. ஆயினும் முன் செய்த வேலைகளுள், சமயவகுப்பு, தேவார வகுப்பு, இராப் பள்ளிக்கூடம், வாரப் பிரசங்கம். துண்டுப் பிரசுரம் வெளியிடுதல் முதலியன சில வருடங்களாக குறைவடைவது சைவசமய அன்பர்களின் மனதை வருந்தச்செய்கின்றது. ஆகையால், முன்செய்த முயற்சிகளை மறுபடியும் ஆரம்பித்துத் தொண்டாற்றுமாயின் எம் சைவசமயம் உலகத்தில் விளங்கும் ஞானதீபங்களுள் ஒன்றாகத் திகழும்.

நாவலர் பெருமானின் அன்பர்களால் ஸ்தாபிக்கப்பெற்ற யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையானது இலங்காதீபத்தின் சைவசமயிகளுக்காக 57 வருடங்களாகத் தொண்டாற்றி வருவது போற்றப்படத்தக்கதே. தற்போதுள்ள சைவசமய முறையில் ஈடுபட்டிருக்கும் சங்கங்கள் மடங்கள் தர்ம ஸ்தாபனங்கள், ஆலயங்கள் முதலிய எல்லாம் "அடப்பன் கொடியும் திரண்டால் மிக்கு" என்பதின் பிரகாரம் ஏகோபித்து,

"எவ்வுயிரு மென்னுயிர்போல்
எண்ணி யிரங்கவுநின்
தெய்வ அருட்கருணை
செய்யாய் பராபரமே,"

சகல ஆன்மகோடிகளும் உய்யுமாறு சைவ உண்மைகளை போதித்து அகநெறியில் வாழுதக்கதாக சாதித்தும் சபைகள் சங்கங்கள் ஸ்தாபித்தும் தொண்டாற்றி வருவார்களானால் எம்தேசம் சீரும் சிறப்பும்பெற்று பொலிவுற்றுப் பண்டைக் காலம்போலச் சிவமயமாய்ப் பிரகாசிக்க எல்லாம வல்ல இறைவன் திருவருள் பாலிப்பாராக.

# சுயபாஷா ஆசிரியர்களுக்கு நால்வகைத் திட்டம்

## கொழும்புக் கூட்டத்தில் பிரேரணை

(நமது நிருபர்)

மருதானை மத்திய பாடசாலையில் 25-4-46 நடைபெற்ற "திரேட்யூனியன்" பிரமாணப்படி பதிவு செய்யப்பட்ட அகில இலங்கைச் சுயபாஷா ஆசிரிய சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில் அகில இலங்கைத் தமிழாசிரிய சங்கக் காரியதரிசி, கல்வி மந்திரியாரையும் அவருடைய நிர்வாகசபை அங்கத்தவர்களையும் பாராட்டி சுயபாஷா ஆசிரியர்களின் சம்பள விஷயமாக அவர்கள் சிபார்சு செய்த சம்பளத்திட்டத்தை வரவேற்றுப் பேசிய பின்பு சுயபாஷா ஆசிரிய சங்கத்தின் எதிர்காலத் திட்டத்தைப்பற்றி பின்வருமாறு பேசினார்.

ஒவ்வொரு அரசாங்கமும் யுத்தபிற்காலத் திட்டமொன்று வகுத்து வைத்திருக்கிறது. அவ்வாறே நாமும் ஒரு யுத்த பிற்காலத் திட்டம் வைத்திருக்கிறோம்.

முதலாவதாக இலங்கையிலுள்ள அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கமும், திரேட் யூனியனைச் சேர்ந்த அகில இலங்கைச் சுயபாஷா (சிங்கள) சங்கமும் ஒன்றாகச் சேர்ந்து ஒரு சங்கமாக நின்று தமது குறைகளுக்காக வாதாடுதல்

இரண்டாவதாக அகில இலங்கைச் சுயபாஷா ஆசிரியர் சங்கம் (தமிழ் சிங்கள) ஒரு பத்திரிகையை நடாத்துதல்.

மூன்றாவதாக ஒரு தலைமைக் காரியாலயம் கொழும்பிலும் கிளைக்காரியாலயங்கள் ஒவ்வொரு மாகாணத்திலும் வைத்திருத்தல்.

நாலாவது தற்போது வேலையற்றிருக்கும் சகல ஆசிரியர்களும் இச்சங்கத்தில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்தல் வேண்டும். ஒவ்வொரு ஆசிரியர்களும் மாதம் மாதம் ஒரு ரூபா வீதம் சங்கத்திற்குக் கொடுத்தால் மாதம் 20000 ரூபா சங்கத்திற்கு வருமானம் வரும், இப்பொழுது வேலையற்றிருக்கும் 300 ஆசிரியர்களுக்கும் ஆளுக்கு மாதம் 40 ரூபா வீதம் கொடுத்தாலும் 12000 ரூபா செலவாகும் மிகுதி 8000 ரூபாவும் சங்கத்தின் மூலதனத்தைச் சேரும். வேலையற்றிருப்போர் ஒவ்வொரு கிளைச்சங்கங்களிலும் வேலைபார்ப்பார்கள். பாடசாலைகள் தோறும் சென்று பணம் வசூலிப்பார்கள். இதனால் ஒரு பாடசாலையிலுள்ள பிள்ளைகளை மறுபாடசாலைக்கு உத்தியோகத்திற்காக இழுக்கும் அவருப்பான வேலை நின்றுவிடும், 500 ரூபா தொடக்கம் 1000 ரூபா வரை முகாமையாளருக்குக் கைக்கூலி கொடுக்க முன்வரும் வேலையற்ற ஆசிரியர்களின் தொல்லை நின்றுவிடும். ஆசிரிய கலாசாலையிலிருந்து வெளிவரும் ஒவ்வொரு ஆசிரியரும் இச்சங்கத்தில் தங்கள் பெயர்களைப் பதிவுசெய்ய வேண்டும். அப்பொழுது வித்தியாதிபதிகளும் முகாமையாளரும் தமது பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் தேவையென்றால் மேற்படி சங்கத்திற்கு விண்ணப்பம செய்வார்கள். மேற்படி சங்க நிர்வாகசபையின் தீர்மானப்படியே ஒவ்வொரு ஸ்தாபனங்களுக்கும ஆசிரியர்கள் அனுப்பப்படுவார்கள்.

ஐந்தாவதாக நாம் நமது காலிலேயே நிற்கப் பயிலவேண்டும். எமது குறையை நீக்க நம்மாலேயல்லாது வேறு ஒருவராலும் முடியாது. மற்றவர்கள் நமது நலங்களைப் பாதுகாக்க முன் வருபவர்களைபோல நடிப்பார்களேயல்லாது உண்மையாக எமக்காக ஒன்றும் தியாகம் செய்யமாட்டார்கள். ஆகையால் இனி வரப்போகும் பாராளுமன்றத்திற்கு நாம் எமது பிரதிநிதி ஒருவரையாவது அனுப்ப வேண்டும். காலஞ் செல்லச் செல்ல சுயபாஷா ஆசிரியர்களுக்கு எங்கெங்கு செல்வாக்குண்டோ அவ்வவ்விடங்களில் நாம் நமது சங்கத்தின் பணவுதவியுடன் அவர்களை அனுப்ப வேண்டும், இனி வரப்போகும் பாராளுமன்றத்திற்கு இப்போது 33000 ரூபா மூலதனமாகக் கொண்ட சுயபாஷா (சிங்கள) ஆசிரிய சங்கத்தின் தலைவர் கவீந்திர பெரேராவையே நாம் அனுப்பவேண்டும். முடியாதென்பதும் என் அகராதியில் இல்லை.

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

புதன் மே 8

காலை 7-15 ஆரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 கண்டதேவி எஸ் திருவேங்கடம் ஐயங்கார் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 வானொலி வாத்ய கோஷ்டி 8-30 டி கே லக்ஷ்மணன் பாட்டு 9 முடிவு.

1 ஆரம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 டி கே லக்ஷ்மணன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கோடைக்கல்வி 2.30 முடிவு.

மாலை 5 பி கே விச்வநாத சர்மா வயலின் 5.40 இசைப் பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் வானிலை 6.15 சித்ரகானம் 6.45 கிராம நிகழ்ச்சிகள் 7.15 புதிய வெளியீடுகள் 7.30 தமிழில் செய்திகள் 7.45 நமது தபால் பெட்டி 8 பி கே விச்வநாத சர்மா வய

(தொடர்ச்சி 4ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புறநானூற்றுப் புரவலர்கள்

வெ. த. சு

## 9. இளங் கண்டீரக்கோ

இவன் முன்னர்க் கூறிய கண்டீரக் கோவின் தம்பி. (சுமணன் தம்பி இளங்சுமணன் என்றவாறுபோல) வரையாது பரிசிலர்க்கு நல்கும் பண்புடையவன். விச்சிக்கோவின் தம்பியாகிய இளவிச்சிக்கோவும் (இளவச்சிரக்கோ எனவும் வழங்கும்) இவனும் ஒரு சமயம் உடனிருந்து சம்பாவிக்குங்கான்று பெருந்தலைச் சாத்தனார் எனனும் புலவர் சென்றார். அங்ஙனம் சென்றவர் கண்டீரக்கோவை மட்டும் தழுவி அணைத்து இளவிச்சிக்கோவை அங்ஙனம் செய்யாதொழிந்தார். அதுகண்ட இளவிச்சிக்கோ புலவரை நோக்கி நீர் இங்ஙனம் செய்ததன் (என்னைத் தழுவாது விட்டதன்) காரணம் என்னையெனக் கேட்டான. அச்சிறந்த புலவர் அவனைப் புகழ்ந்தும இவனை இகழ்ந்தும் கூறிய தன் காரணத்தை விளக்கும் விதம் மிகவும் போற்றத்தக்கது.

அவர் அவனை (இளவிச்சிக்கோவை) நோக்கி இளங்கண்டீரக்கோ வெனிலோ, முன்னும் முன்னும் பாடுவார் விரும்பிவர, விசும்பைப் பொருந்திய உயர்ந்த மலைப்பக்கத்தே, நெடுந்தூரத்தின்கண்ணே தங் கணவர் சென்றாலும், பரிசிலபெற வந்தார்க்கு, ஆபரணத்தையணிந்து, புல்லிய தலையையுடைய மெல்லிய மிடலைய அவர் பெண்டிரும் அக்காலத்திலே பரிசிலைக் கொடுக்கும் வளவியபுகழையுடையவன். ஆதலின் அவனைத் தழுவினேன். அன்றி நீ பொன்னாற் செய்யப்பட்ட தேரினையுடைய நன்னன் மரபினுள்ளான் ஆதலின் தழுவுவதற்குப் பொருந்திலையாயினும் பரிசில் வேண்டி வருவார்க்கு அடைத்த கதவு காரணமாக, அரைமலைக்கண்ணே சொரியும் மண் நாறும் நீரினது உயர்ந்த மலையைப் பாடுதலை அம்மலர் (பரிசிலர்) நீங்கினர். அதலின் நின்னைத் தழுவாதொழிந்தேன என்றார், எனவே அவனில்லாவிடத்துப் பெண்டிரும் தந்ததிடும் பரிசில் நல்கும் பண்பினையுடையவனேபதும், இலனில்லாவிடத்தில இங்ஙனம நடப்பதில்லையென்றும் பரிசிலர்க்கு எல்லாம கதவு அடைக்கப்படுதலின, பாடுவார் பாடுதலை நீங்கினர் எனவும் புலவர் கூறும பண்மை மிகவும் விரும்பத்தக்கது.

## 10. வல்வில் ஓரி

கடையெழுவள்ளல்களில் ஒருவன். கொல்லி மலைக்கும் அதனைச் சார்ந்த நாட்டிற்கும் தலைவன். ஆதனோரி எனவும் இவன் பெயர் வழங்கும். வன்பரணர் என்னும்புலவர் பரிசில் விடையக் கூறும் செய்யுள் ஒன்றினால் அவனது அம்பின் வலிமையையும், அவன் செல்வையும் சித்திரித்துக் கூறுவது கூர்ந்து நோக்கற்பாலது.

முழையை யுடைத்தாகிய உச்சியையுடைய உயர்ந்த பெரிய கொல்லி மலைக்குத் தலைவன். வரைவில்லாத வண்மையை யுடையவன். சிறந்த வெற்றியையுடையவன். அவன் வேட்டஞ் சென்ற விட்டவோர் அம்பு ஆனையைச் சென்று வீழ்த்தி, அயலேயுள்ள பெரிய வாயையுடைய புலியை இறக்கச்செய்தது. அல்லாமல் அந்த அம்பு தலை பொருந்திய தலையையுடைய புள்ளிமான் கலை மேற் பாய்ந்து அதனையுருண்டோடச் செய்ததுமன்றி, உரல்போன்ற தலையினையுடைய பன்றியையும் வீழ்த்தி விட்டது. அவ்வளவில் அந்த அம்பு தன் தொழிலை நிறுத்தவில்லை. அப்பால் புற்றின்கண் கிடந்த உடும்பின உடலினுள் சென்று துளைத்துவிட்டது. இத்தகைய சிறப்புப் பொருந்திய அம்பு, தனது வில்லிலே மிகவும் சென்று விள ங்குதற்குக் காரணமா யிருந்தவன்? அத்தகைய கொலைவலான்? அவன் யாரோவெனின்? இவனே அன்றி விலை(ப் படுதல்) காரணமாகக் கொன்றானோ வெனின்? இல்லை, ஏனெனில் இவன் செல்வ மிகவும் உடையவன். சந்தனம் பூசிப் புலர்த்திய அழகிய சிறந்த பரந்த மார்பினையுடையவன். சாரற் கண்ணே அருவியையுடைய பயன்படு மலைக்குத் தலைவன் அவன் ஓரியாக அன்றி வேறு யாருமாக. விறலி! யான் ஒருவண்ணம் பாடுவேன். நீங்களும் சும்மா இருக்காதீர். முழாவினிடத்தே மார்ச்சனை (ஒலி)யை இடுமின்! யாழிலே பண்ணை உண்டாக்குமின்! வங்கியத(வாத்தியத்)தை இசைமின்! சல்லியை வாசியுமின்! சிறு பறையை பறைமின்! பதலையை மெதுவாகக் கொட்டுமின்! என்றுமது பிறப்புணர்த்தும் கரிய கோலைக் கையின்கண்ணே தாருங்கள் எனச் சொல்லி அவனிடத்தே அணுகினேன். அவன் தலைவனுதலாலே இருபத்தொரு பாடல் துறையையும் (என்றது வலிவு, மெலிவு, சமம் என்னும் மூன்று தானத்திலும் ஒவ்வொன்றில் ஏழுதானமுடித்துப் பாடப்படும் பாடற்றுறையாகும் அன்றி 21 பாடற்றொடுக்கப்படும் பாலையினுமாம்) முறைப்படி பாடினேன். கோவே, என அவன் பெயர் கூறினேன். அவ்வாறதைத் தன பெயரால் அவன் நாணினான். அதுகண்டயாம் அவனை நோக்கி யாங்கள் நாடு காடுகளாகச் சென்றுதான் வருகின்றோம். இன்னையோபா ரொருவேட்டுவ ரில்லையென யாம் விரும்பிக் கூறினோமாக. அங்ஙனம் கூறவும் விடாலாய் எமக்குநல்கினான் எதனையெனின் மானினது நிணம் பொருந்திய தசையினது புழுக்குடனே ஆவின் நெய்யை உருக்கினாற்போன்ற மதுவையும் தனது மலையின்கட் பிறந்த குற்றமில்லாத பொன்னையும் எனப் புலவர் அவனிடத்தில் அவன் புகழைக் கூறுவோர்க்குப் பரிசில் வழங்கும் பான்மையை அப்படியே படம்பிடித்துக் காட்டுவது எவ்வளவு அழகாயிருக்கிறது.

இன்னும் அவனது இயல்பை ஒரு செய்யுளால் புலவர் கூறுவதிலத்தை ஆனை கூம் அமைந்துள தென்பதை நோக்குக.

முகில் சூழ்ந்த மலைக்குத் தலைவன் ஓரி; அவன் கதிர் விடுகின்ற பசும்பொன்னாற் செய்த அணியினையும் விளங்கிய கடகமமைந்த முன்கையினையுமுடைய தனது கையினால் ... முதலாகிய பூண்களை பணிந்த யானையை நாடோறும் இரப்பவர்க்குக் கொடுப்பவன். கொல்லும் போர்த் தொழிலில் அமையாதவன். அத்தகைய ஆதனோரியது வள்ளிய கொடையைக் காண்டற்குச் சென்றது எம்முடைய சுற்றம். அங்ஙனஞ் சென்ற அச்சுற்றம் திரும்பிய பின்னர் தமது பாடுகலையும் ஆடுதலையும் மறந்தனராயினர். அதற்குக் காரணம், அவர்களை நீரின்கட் பூவாத மணமிடைந்த குவளைப்பூவை, வெள்ளிய நாரால் தொடுக்கப்பட்ட பொன்னரியாலையினையும், பிற அணிகலன்களையும் யானைகளுடனே பெற்றமையாமன்றோ? எனகின்றார். இனி அச் செய்யுளையும் படித்துப்பாருங்கள்.

மழையணி குன்றத்துக்
கிழவன் நாளும்
இழையணி யானை
இரப்போர்க் கீயுஞ்
சுடர்விடு பசும்பூட்
சூர்ப்பகூ முன்கை
அடுபோர் ஆனா
வாதன் ஓரி
மாரி வண்கொடை
காணிய நன்றும்
சென்றது மன்னெம
கண்ணுளங் கடும்பே
பனிநீர்ப் பூவா
மணிமிடை குவளை
வாலுளர்த் தொடுத்த
கண்ணியுங் கலனும்
யானை யினத்தொடு
பெற்றனர் நீங்கிப்
பசியாராகன் மாறுகொல்!
விசி பிணிக்
கூடுகொள் இன்னியங்
கறங்க
ஆடலு மொல்லார் தம்
பாடலு மறந்தே

என்பதாம். இதனால் ஓரியின்கொடைச் சிறப்புணருங்கள். வாயாறு பாடச் சென்றோர், யாவையும அறவே மறந்துவிட்ட காரணம் அவன ஈகையும் அதனாற் பசியின்மையுமாம் எனக் ... புறத் தக்கது.

---

## வலிகாமம் கிழக்குப்பகுதித் தமிழாசிரியர் விடுமுறைக் கழகம்

மேற் கழகமானது மேற் ஆசிரிய சங்க ஆதரவில் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி மண்டபத்தில் 25, 26, 27-4-46 ஆய மூன்று நாளும் மிகவும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

முதலாம் நாள் முற்பகல் திரு. V. K. நாதன் B. A. (E. O. N. D.) அவர்கள் தலைவராயமர்ந்து விரிவுரையாற்றியபின் திரு. A. V. மயில்வாகனம் B. A. (வித்தியாதரிசி, புத்தளம்) அவர்கள் காக்ஷி மாற்றம் என்னும் பொருள்பற்றியும், திரு. S. அம்பிகைபாகன் B. A. (தலைமையாசிரியர், வித்தியாலயம் வண்ணார்பண்ணை) அவர்கள் பிரதம வகுப்புகளிற் சரித்திரங் கற்பித்தல் என்னும் விஷயம்பற்றியும் விரிவுரையாற்றினர். பிற்பகல் திரு. ச. கிருஷ்ணபிள்ளை B. A. (E. A. O. N.D.) அவர்கள் தலைவராயமர்ந்து விரிவுரையாற்றியபின் திரு. V. A. யோன்பிள்ளை (தலைமையாசிரியர், ஆசிரியகலாசாலை இளவாலை) அவர்கள் பிரதம வகுப்புக்களுக்கு எண் பயிற்றல் எனனும் விஷயம்பற்றி விரிவுரையாற்றினர்.

இரண்டாம்நாள் முற்பகல் திரு. K. S. அருள்நந்தி M. Sc. (அதிபர் ஆங்கில ஆசிரியகலாசாலை கொழும்பு) அவர்கள் தலைவராயமர்ந்து விரிவுரையாற்றியபின் பண்டிதர் S. ஆனந்தர் B. O. L. (இந்துக்கல்லூரி சாவகச்சேரி) அவர்கள் மேல் வகுப்புகளில் இலக்கியம் பயிற்றல் என்னும் விஷயத்தைப்பற்றியும் திரு. S. குலரத்தினம் (ஆசிரியர் கந்தர்மடம்) அவர்கள் ஆசிரியரும் உலகமும் என்னும் விஷயத்தைப்பற்றியும் விரிவுரையாற்றினர். பிற்பகல் திரு. S. வீரசிங்கம் (தலைமையாசிரியர் ஸ்ரீ சோமாஸ்கந்த ஆங்கில வித்தியாலயம் புத்தூர்) அவர்கள் தலைவராயமர்ந்து பிரதம வகுப்புகளுக்கு ஆங்கிலங் கற்பித்தல் என்னும் விஷயத்தைப்பற்றி விரிவுரையாற்றினர்.

மூன்றாம் நாள் திரு. S. நடேசபிள்ளை (B. A., B. L., M. S. C.) அவர்கள் தலைவராயமர்ந்து விரிவுரையாற்றியபின் திரு. S. H. பேரின்பநாயகம் (நியாயவாதி கொழும்பு) அவர்கள் வருங்காலத்தில் தமிழ்ப்பாஷைக்கல்வி என்னும் விஷயத்தைப்பற்றியும் பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை (பத்திராதிபர் இந்துசாதனம் வண்ணார்பண்ணை) அவர்கள் பாடப்புத்தகம் எனனும் விஷயத்தைப்பற்றியும் விரிவுரையாற்றினர். பிற்பகல் திரு. S. இராசரத்தினம் (காரியஸ்தர் (H. B. E. நியாயவாதி) அவர்கள் தலைவராயமர்ந்து விரிவுரையாற்றியபின் திரு. M பாலசுந்தரம் (நியாயவாதி, யாழ்ப்பாணம்) அவர்கள் கல்வியும் தேசீயமும் என்னும் விஷயத்தைப் பற்றி விரிவுரையாற்றினர். —கா. த.

---

## வைகாசி விசாகம்

(திரு. சே. வெ. ஜம்புலிங்கப்பிள்ளை)

வைகாசி மாதத்தில் விசாக நட்சத்திரம் சிறப்புள்ளது. அந்நாளின் பெயரையே மாதமுங் கொண்டிருப்பது நோக்கற்பாலது. அநேகமாக இவ்விசாக நாளில் பௌர்ணமியும் சேர்ந்துவரும். இவ்விசாக நாளில் ஆறுமுகக் கடவுள் சிவபெருமானுடைய நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றியதாகப் புராணங் கூறுவதால் இந்நன்னாளில் சண்முகப் பெருமான் வழிபாடு மிகுதியாகக் கொண்டாடப்படுகின்றது. திருச்செந்தூர், பழநி, திருத்தணிகை, குன்றக்குடி, திருப்பரங்குன்றம் முதலிய சுப்பிரமணிய தலங்களில் இத்தினத்தில் உற்சவாதிகள் நடப்பது வழக்கம். வைகாசிப் பூரணையில சிவபெருமானுக்கு சந்தனபிஷேகஞ் செய்வது ஆகமக் கொள்கை.

குருப பிரியரகிய திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகளின் குருபூசை வைகாசி விசாகத்திற்றான் கொண்டாடப்படுகிறது. புத்தர்பிரான் இத்தினத்திலே நிர்வாண நிலை அடைந்ததாகக் கூறுப. அந்நாளைப் பௌத்தர்கள் கொண்டாடுவதைக் காணலாம். முருகக் கடவுள் விசாக நட்சத்திரத்தில் திருவவதாரஞ் செய்தபடியால் அவருக்கு விசாகன் என்னும பெயரும உளதாயிற்று. இத்தினத்தில் யாமெல்லாம திருக்கோவிலுக்குச் சென்று ஆறுமுகக் கடவுளை வழிபட்டு உய்வோமாக.

ஆறுமுகப் பிரானன்றி யிவ்வினை
யாறுரு துணையில்லை மெய்மை யிஃதனை
நீதறிந் தவனடி சிந்தை செய்தனன்
மாறிலா யுவிநீ வழியுகக்கணிறுன்

---

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

3-ம் பக்கத் தொடர்ச்சி

வின் 9.30 கண்டதேவி எஸ் திருவேங்கடம் ஐயங்கார் பாட்டு 9 ஆங்கிலப்பேச்சு 9-15 ஆங்கிலத்தில் செய்திகள் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9.45 ஐரோப்பிய சங்கீதம் 10-30 முடிவு.

### வியாழன் மே 9

காலை 7-15 கிதாரம்பம் 7.20 தமிழில் செய்திகள் 7-30 டி எஸ் லோகநாதன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 சித்ரகானம் இசைத்தட்டு 8.30 டி ஆர் வெங்கடசுப்ரமணியம் வீணை 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 டி ஆர் வெங்கட சுப்பிரமணியம் வீணை 2 தமிழில் செய்திகள் 2-05 கோடைக்கல்வி 2-30 முடிவு.

மாலை 5 டி எஸ் லோகநாதன் பாட்டு 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் வானிலை 6.15 வி வி சடகோபன் ஒலிப்பதிவு 6-30 சித்ரகானம் இசைத்தட்டு 6.45 கிராம நிகழ்ச்சிகள் 7.15 இலக்கிய வாசகம் 7-30 தமிழில்செய்திகள் 7-45 பல்லடம் சஞ்சீவராவ் புல்லாங்குழல் 9 பனித்துளி இசைக்கற்பனை 9-15 ஆங்கிலத்தில் செய்திகள் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9-45 சுத்தானந்தபாரதிபாடல்கள் கே வி காளிதாஸ் பாட்டு 10 இசைவேளை 10-30 முடிவு.

### வெள்ளி மே 10

காலை 7-15 கிதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7.30 உமையாள்புரம் ஜி கலியாணராமையர் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 திருச்சி வாத்யகோஷ்டி 8.30 எஸ் பி கல்யாணசுந்தரம் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 எஸ் பி கலயாணசுந்தரம்பாட்டு 2 தமிழில செய்திகள 2-05 கோடைக்கல்வி 2.30 முடிவு.

மாலை: 5 மன்னார்குடி எம் மாணிக்கம் பிள்ளை நாகஸ்வரம் 5.10 குரான் ஷரீப் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் வானிலை 6 15 சித்ரகானம் இசைத்தட்டு 6-45 கிராம நிகழ்ச்சிகள 7-30 தமிழில் செய்திகள் 7-45 மன்னார்குடி எம் மாணிக்கம்பிள்ளை நாகஸ்வரம 8-20 கைதி வசன நடகம் 8-45 உமையாள் புரம் ஜி கல்யாணராமையர் பாட்டு 9-15 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9.45 உலக விவகாரஙகள 10 இசைவேளை 10 30 முடிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தபுராணக் கவி நுட்பம்

## திருவவதாரப் படலம்

வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளை அவர்கள் வாய்க் கேட்டெழுதப்பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும் பெருங் குறிப்புக்கள் இப் [ ] பகரக் குறியீட்டுடன் வெளிபிடப்பட்டுள்ளன.

நிற்புறு மமரர் யாரு நெஞ்சுதுண் ணென்ன நீடும்
அற்புத நீர ராகி யருண்முறை யுன்னிப் போற்றச்
சிற்பரன் ருன்கோண் டுள்ள திருமுக மாறு தன்னிற்
போற்புறு நுதற்கண் டோறும் புலிங்கமோன் ரேன்று தந்தான்.

பெருமானுரது சந்நிதியில் நிற்கின்றவர்களாகிய தேவர்க ளனைவரும் தத்தம் உள்ளம் திடுக்குற நிலையான அற்புதத்தோடு கூடியவர்களாய்ப் பரமசிவனுடைய திருவுருட் கிரமத்தைச் சிந்தித்துத் துதிப்ப, ஞானுதீராகிய பரமேசுவரன் தாம் கொண்டருளிய திருமுகங்களாறினிடத்துமுள்ள அழகுடன் விளங்கும் நெற்றிக்கண்கள்பால் தனித்தனி ஒவ்வொரு நெருப்புப் பொறியைத் தோன்றச் செய்தார் என்பது கருத்து.

இறைவனுடைய நெற்றிக்கண்ணிற் றோன்றும் தீப்பொறி யொன்றே சங்காரத் தொழிலைச் செய்தற்கமைந்ததாக, அந்தச் சங்கார காலத்திலே அரிபிரமர் முதலாந் தேவர்கள் துஞ்சுவாராக, இப்பொழுது அறுமுகங்களிற்கொண்ட திருவிழிகளிடத்து அறுதீப்பொறி பிறந்ததைக் கண்ட மாத்திரத்தே அரிபிரமேந்திராதி தேவர்களனைவரும் நெஞ்சந் துணுக்குற்றனர். இறைவனுடைய நுதல்விழியிற் றோன்றும் புலிங்கமென்றால் துஞ்சுறுமமரர், இச்செயல் சங்காரத் தொழிலாகாது, படைத்தற்பொருட்டும் காத்தற்பொருட்டும் நிகழுஞ் செயலாகலின் அறு பொறிதோன்றிய விடத்தும் அரிபிரமர் துஞ்சலின்றி நெஞ்சந் துண்ணென நின்றனர்; நின்ற தேவர் முன்னெக்காலத்தாயினும் பெருமானுடைய நெற்றிக்கண்களிலிருந்து அறுபொறி தோன்றியமையைக் கண்டிலாதலானும், முந்தி யொருபொறியே தம்மைத் துஞ்சலுறுத்த இப்பொழுறு அறுபொறிகளும் தங்கட்கு வெம்மை பயப்பதேயன்றி வேறு இடர் செய்யாமையானும், தம் பகைவராகிய சூரன் முதலாம் அசுரரை வதைக்கும்படி ஒரு குமரனைத் தந்தருளுதல் வேண்டுமெனத் தாம் இரந்து நிற்ப, அங்ஙனம் அருளுதலின்றித் தீப்பொறியாறைத் தோற்றுவித்தமையின் காரணமறியாராதலினுலும், இறைவனுக்கு ஒரு மாத்திரைப்பொழுது இத்தேவர்கட்கு நீடித்த காலமாக நிகழுமாதலானும் "நீடும் அற்புத நீரராகி"யென்றூர்; தேவர்கள் நெஞ்சந் துணுக்குற நீடும் அற்புத நீரராகி நின்று போற்றியதற்குக் காரணம் இறைவன் இச்சமயத்திலே தமக்குச் செய்யுங் கருணை யறக்கருணை யென்பதை யுணர்ந்துள்ளாராதலினென்பதைத் தெருட்டுவார் ஆசாரிய சுவாமிகள் "அருண்முறை உன்னிப் போற்ற" என்றூர். ஸ்ரீகண்ட பரமேசுவரனே தேவர்கள் குறை தீர்த்தருளவேண்டிச் சண்முகக் கடவுளைத் தருதற்பொருட்டு, சதாசிவ மூர்த்திக்குரிய திருமுகங்கள் ஆறினையுங் கொண்டாரென்பது, "தனது தொல்லைத் திருமுகமாறுங் கொண்டான்" என்னும் முந்திய திருவிருத்தத்தானும் "சிற்பரன்றுன் கொண்டுள்ள திருமுகமாறுதன்னில்" என்னும் இத் திருவிருத்தத்தானும் இனிது புலப்படக் கிடத்தல் காண்க

(44)

## யா. ஆ. தி. ப. சங்கம்

### ஆராய்ச்சிப் பட்டம்

சென்ற 27-4 46 ல் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மண்டபத்திற் கூடிய யாழ்ப்பாண ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்க வருடாந்தக் கூட்டத்தில் பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினம் அவர்கள் பிரேரித்த பின்வரும் பிரேரணை யாவராலும் எற்கப்பட்டு வேண்டிய ஒழுங்குகளைச் செய்யுமாறு நிருவாகசபைக்கு அதிகாரமும் அளிக்கப்பட்டது.

பிரேரணை: 'தமிழாராய்ச்சியை நன்கு விருத்தி செய்வதற்காக இச்சங்கப் பண்டித பரீக்ஷையிற் சித்தியெய்தி ஐந்தாண்டுகளின்பின் சிறந்த ஆராய்ச்சி நூல்களை எழுதிச் சமர்ப்பிப்பவர்களுக்கு அவர்களின் ஆராய்ச்சித் திறனை மதிப்பிட்டறிந்து தகுதியுடையராய்க் காணப்படின், 'பண்டிதமணி' போன்றதோர் ஆராய்ச்சிப் பட்டத்தை அளிப்பதற்கு வேண்டிய ஒழுங்குகள் செய்யப்படவேண்டும்."

## தேவை

புன்னலைக் கட்டுவன் தெற்கு ஐக்கிய பண்டக விற்பனவுச்சாலை (555) க்கு ஓர் மனேச்சர் தேவை, 15-5-46க்குப் பிந்தாமல் விண்ணப்பங்கள் காரியதரிசிக்கு அனுப்பப்படல் வேண்டும். சம்பளம் மாசம் 55 ரூபா; 500 ரூபா பிணைகட்ட வேண்டும்.

இங்ஙனம்
சி தங்கசாமிஐயர்,
காரியதரிசி

ஐக்கிய பண்டக விற்பனவுச்சாலை (555),
புன்னலைக் கட்டுவன் தெற்கு.
5-5-46. (Mis 38 7—10)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

தத்துவ இல. 304

காலம்சென்ற சுப்பிரமணியம்-வேலனை மேற்கு

எதிர்

சுப்பிரமணியம் முருகேசு கைம்பெண் வள்ளியம்மை, நாரந்தனை வடக்கு, தத்துவகாரி.

Vs

முருகேசு நமசிவாயம் றெஸ்போண்டன்ற்

யாழ்ப்பாண டிஸ்திறிக் கோட்டின் 304 T ம் இலக்கவழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிககப்படும் ஒரு துண்டுக் காணியை 1946ம் ஸூ ஆனிமீ 1 ந்உ சனிக்கிழமை பிற்பகல் மூன்றுமணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் வி கப்படும்.

யாழ்ப்பாணம் 1946ம் ஸூ வைகாசிமீ 1.ந் உ.

### காணி விபரம்

1. வேலணை மேற்கு இறை மேற்குச் சீமா நி. ப. நாலு ஆனல் அளவுப்பட்டி கெ. ப. எழுங் கிணறும் கல்வீடும் செய்பயிர் வான்பயிர்களும் எல்லை. கிழக்கு, பெரிய தம்பி செல்லமுத்து பெண் பொன்னச்சி. வடக்கு ஒழுங்கை மேற்கு, யாதவராயர் பெண் லட்சுமிபம்மா. தெற்கு, சிவகுரு பெண் மாரிமுத்து. இதில் சொரியலாய் அரைவாசியைக் கோட்டுக் கட்டளைப்படியும் மிகுதியைத் தத்துவகாரியின் விருப்பப்படியும் விற்கப்படும்.

2 இக்காணிக்குள் இருக்கும் மரக்ருத் திகளையும் விற்கப்படும்.

க. ப. இளையதம்பி
கொமிஷனர்

காரைநகர்
Mis. 35. 7-5-46)


விற்பனர் செய்யும் அற்புதக் காட்சிகள்!

ஆநந்தபரவசமளிக்கும் அற்புதங்கள்

கிருஷ்ண பரமாத்மாவின் துவாரகைக் காட்சி

இராமநாதன் நகர்:

ஈழமண்டலம் சேரமண்டலம்
பாண்டிமண்டலம் சோழமண்டலம்

பூவுலகில் இந்திரலோகக் காட்சி

இவைமட்டுமா?

சிங்கார கானங்கள்; ஒய்யார நடனங்கள்!
சமூகவாழ்வைச் சித்திரிக்கும் சங்கீத நடனங்கள்!

பந்தநல்லூர் மீனுட்சி சுந்தரம்பிள்ளையின் பௌத்திரி பரதநாட்டியக் கலையரசி
பந்தநல்லூர் ஜெயலக்ஷ்மியின் பரதநாட்டியக் கச்சேரி ஒரு தனிவிசேஷம்

உலகப் பிரசித்திபெற்ற கோபிநாத் அவர்களின் பிரதமசிஷன்
சந்திரசேகரனதும் அவர் கோஷ்டியாரினதும் கதாகளி நடனங்கள்

இவை எல்லாம் எங்கே?

பரமேஸ்வரக் கல்லூரி முன்றிலில்

மேமீ 14-உ தொடக்கம் 21-ந்உ வரை
தினந்தோறும் பிற்பகல் 4 மணி தொடக்கம்

எல்லோரும் வாருங்கள்! குதூகலத்திற் சேருங்கள்!

(Mis 34)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தபுராணம்

1ம் பக்கத் தொடர்ச்சி

சொல் கின்றமுனி வடநூல் தெரீஇத், தென்சொ லாற்சிறி யேன்உரை செய்தலால், மென்சொல் லேனும் வெளிற்றுரை யேனும்வின், புன்சொல் லேனும் இகழார் புலமையோர்" என வரும் திருவிருத்தங்களால் அறியலாம். தமிழிற் பாடுவதால் எப்புராணமும்சிறப்படையும் ஈண்டு "தமிழ்ச் சொல்லால்" எனக் கூறுது 'தென் சொலால்" எனக் கூறும் நுட்பம் கூர்ந்து வியக்கற்பாலது: "தென்மொழி" என்பதற்கு அழகுடைய பாடை, இசையுடைய பாடை எனப் பொருள் கூறுவர் சபாபதி நாவலர். பிறிதொரு காரணம் இல்லாது இயல்பாகவே மெல்லோசை இன்பமுடைய பாடையால் எதனைப் பாடினும் அது சிறப்படையும், என்றும் முருகமூர்த்தியைத் தமிழ்த் தெய்வம் என்று கொண்டாடுவதில் ஆசாரிய சுவாமிகளுக்கு அதிக ஆசை.

"சங்கத் தவர்க்குத் தலையாம்
தமிழ்ப் புலவன்
செங்கைக்குள் வந்து சிறப்புற்
றிருந்துளதால்"
"திருந்தமிழ் சுடலை தன்னிற்
சிவன்பொருள் நிறுக்கு மாற்றல்
உருத்திர சன்ம னுதி
உற்றிடு நிமலன்"

எனவரும் திருவிருத்தங்களால் அறியலாம்.

ஆசாரிய சுவாமிகள் முருகக் கடவுள் இடத்து வைத்துள்ள பத்திக்கு எல்லையில்லை;

"பஞ்சிதனின் மெல்லடி பனிப்ப
வரையின்பாற்
குஞ்சரி நடந்தசெயல் கூறு
புதுமைத்தோ
செஞ்சுடரவை வேறுடைய செம்ம
லடிநீயேன்
நெஞ்சக வடுக்கலினும் நின்றுலவு
மென்றால்."
"புன்னெறி யதனிற் செல்லும்
போக்கினை விலக்கி மேலாம்
நன்னெறி யொழுகச் செய்து
நவையறு காட்சி நல்கி
என்னையும் அடிய னாக்கி
இருவினை நீக்கி யாண்ட
பன்னிரு தடந்தோள் வள்ளல்
பாதபங் கயங்கள் போற்றி."

என வரும் திருவிருத்தங்களால் அறியலாம். (தொடரும்)

---

### வலிகாமம் கிழக்குப்பகுதித் தமிழாசிரிய சங்க வருடாந்தக் கூட்டம்

மேற்படி கூட்டம் 27-4-46 சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி மண்டபத்தில் அப்பகுதி வித்தியாதரிசி திரு E ஆளம்பலம் அவர்கள் தலைமையில் ஆரம்பமானது.

காரியதரிசியால சென்றகூட்ட வரலாறும் வருடாந்த அறிக்கையும் வாசிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. தனாதிகாரியால் வரவு செலவுக் கணக்குகள் வாசிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டன. பின் புது வருடத்துக்குச் சங்கத் தலைவராக பண்டிதர் க. மயில்வாகனம் (தலைமையாசிரியர் ஸ்ரீ சோமாஸ்கந்த தமிழ் H. B. வித்தியாலயம்) அவர்களும் உப தலைவர்களாக, திரு கனகரத்தினம் (தலைமையாசிரியர் A. M. பாடசாலை ஏவலாய்) அவர்களும், திரு. D.M இராசரத்தினம் (தலைமையாசிரியர் CC பாடசாலை இருபாலை) அவர்களும், காரியதரிசியாக திரு சி. கந்தசாமி (ஆசிரியர் புத்தூர் H B வித்தியாலயம்) அவர்களும், உபகாரியதரிசியாக திரு ஜெகநாததுரை ஆசிரியர் உரும்பராய் அவர்களும் தனாதிகாரியாக திரு. A S சவுமியப (தலைமையாசிரியர் C C பாடசாலை நீர்வேலி) அவர்களும், நிர்வாகசபை அங்கத்தவர்களாக வேறு ஆசிரியர்களும் தெரிவு செய்யப்பட்டனர். —சடித

---

## பசந்த லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருறாத்தல் விலை ரூபா 25
அரைறாத்தலுக்கு ரூபா 12-50
கால்றாத்தல் ரூபா 6-25

விலாசம்:

**க. ஆறுமுகம்பிள்ளை**
நி. 156, செக்கடித்தெரு கொழும்பு
(Mis 25 23-4-46 to 22-3-47)

---

## தந்தரோகசஞ்சீவி
### கந்தசாமி வைத்தியர்
## சந்தனாதித் தயிலம்

ஒரு கிழமைக்கு வைக்கக்கூடிய
ஒரு அவுன்சு தயிலம் விலை ரூ. 2

ஒவ்வொருநாளும் ஒருசதவீதம் வைத்துக் கடைசியன்று சீயாக்காய் வெந்தயம் அவித்துத் தப்பி வெந்நீரில் தோய்வது பத்தியம்: புகையிலையாகாது ஆடினபல்லு உடனே இறுகும், முரசு வளரும், வாய்ப்புண் வீக்கம் தொண்டைப்புண் கம்மல் இருமல் கபாலம் பீனிசம் மாற்றும் உத்தரவாதமுடையது. ஒரு தடவை வேண்டிப் பாவித்து அறியலாம்.

நெருப்புச்சூடு முதல் எந்த வேக்காட்டிற்கும் பூச உடனே வேதனை தணியும்.

வீ. பீ. பீ யிலும் அனுப்புவோம்.
சீசா மூலிய செலவு வேறு:

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை.

வல்வை நரசிங்க வைரவாலயத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

Mis 27 26-4 46—25-10-46

---

## புகையிலை தேவை

பெருந்தொகையில் யாழ்ப்பாணப் புகையிலை தரக்கூடியவர்கள், என்ன விலையில், மாதம் எவ்வளவு, தரமுடியும் என்பதைப் பின்வரும் விலாசதாருக்கு எழுதுக: வங்கி மூலமாக உரக்கம் கொடுக்கப்படும்.

**T. N. ரத்தினம்,**
82, அம்பாங்தெரு,
கோலாலம்பூர், மலேயா.

Mis 9 9-4—13-5

---

### இலங்கைத் தூதுக்கோஷ்டி
நேபாளம் போய்ச்சேர்ந்தது

சமீபத்தில் இலங்கையிலிருந்து சென்ற நல்லெண்ணத் தூதுகோஷ்டி சென்றமீ 18-ந் திகதி நேபாளத்தில் போய்ச் சேர்ந்துவிட்டதாகக் கொழும்புக்குத் தகவல் கிடைத்திருக்கிறது.

நேபாள மகாராஜாவின் அழைப்பிற்கிணங்க பம்பலப்பிட்டிவஜிராராமா கோவிலைச் சேர்ந்த மகாதீரோ நாரதாவின் தலைமையில் இத் தூதுகோஷ்டி சென்றிருக்கிறது.

இலங்கைச் சர்வகலாசாலையின் கீழ்நாட்டுக் கலாபீடத் தலைவர் பேராசிரியர் எம். டி. ரத்னசூரியா, சர்வகலாசாலைப்போதகாசிரியர் திரு எம், பி ஆரியபாலா முதலியோர் இத்தூதுகோஷ்டியினருடன் சென்றிருக்கின்றனர்,

---

## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
**134,3670**
**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும், தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம். இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகோள்ளலாம்

**S. கனகசபை**
சிறாப்பர்.

Y 12 20-11-45—20-11-46 (தி)

---

வெற்றியைப் பின்தொடர்ந்து இதோ வந்துவிட்டோம்

## அஜ்மீர் ஜெனரல் அஷூரன்ஸ்
### வீமாக்கொம்பனி லிமிற்றெட்

ஸ்தாபிதம் 1907

எமது அதிசய சேவையின் அற்புத வெற்றி

| | | |
|---|---|---|
| இப்போதுள்ள பொலிசிகள் ரூபா | 700,00,000—00 | மேற்பட்டது |
| இதுவரை கொடுபட்டதொகை ரூ | 113,00,000—00 | ,, |
| இப்போதைய இருப்பு ரூபா | 170,00,000—00 | ,, |
| 1944ம்ஆ. வருஷாந்த வருமானம் | 39,45,103—00 | ,, |

அயுள், அக்கினி, தொழிலாளர் நஷ்டஇடு, விபத்து
முதலியவற்றிற்கு இன்ஷூர் செய்யப்படும்

எவருக்கும் தகுதியான குறைந்த கட்டணப் பணம் உடையது
இலங்கையில் சகலபாகங்களிலும் ஏஜென்ஸ் தேவை
நல்ல சம்பளமும் உத்தியோக நிலைபரமும் கொடுக்கப்படும்
விபரங்களுக்குக் கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதவும்

கிளைக் காரியதரிசி, **டொன் கரலிஸ் கட்டிடம்,**
91, முதலாம் குறுக்குத்தெரு,
புறக்கோட்டை, கொழும்பு.

Mis 154 29-11-45—30-11(தி)

---

### பேர்பெற்ற பேசல் மிஷன் கலிக்கற் ஓடுகள்

உலகப் பிரசித்திபெற்ற, திறமானவையும், நன்மதிப்பு உள்ளவையும், பேசல் மிஷன் கலிக்கற் ஓடுகளே. மிகக் குறைந்த தண்ணீரை உறுஞ்சுவன. கடைகளில் விலைப்படும் பலதினிசு ஓடுகளையும் நிறுத்துப்பார்த்துத் தண்ணீருள் நனையவிட்டுபின்னும் நிறுத்து எது கூடிய தண்ணீரை இழுக்குமெனப் பரிசோதித்துப் பாருங்கள். தற்கால நிலைமைக்கும். தேவைகளுக்கும் ஏற்ற ஒரு புதுமாதிரி இவ்வோடுகள் செருகு விளிம்பும், இரட்டைப் பீலியும் உள்ளனவாய்ச செய்யப்பட்டு இக்காலத்தில் அதிகமாய் உபயோகிக்கப்படுகின்றன. கீழைத் தேசத்தில் விலைப்படும் ஓடுகளுள் இவைகளே முதன்மை பெற்றன. வாங்கத் தீர்மானிக்குமுன் இவ்வோடுகளை ஒருதரம் பாருங்கள், கவனியுங்கள். மற்றைய ஓடுகளில ஏமாந்து நட்டப்படாதீர்கள்.

வேறு சாதி ஓடுகளைப்போல வழக்கமான தனிப் பீலி ஓடும்
இங்கே பெற்றுக்கொள்ளலாம்.

**வில்லியம் மேதர் அன்சன்ஸ்,** தனி ஏசன்ட்
1888-ம் ஆண்டுமுதல்.

Misc 250—19-3-46—19-9-46) (செ)

---

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோனமுறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகோள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்

---

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Tuesday May. 7, 1946,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org